# "The Child Rights Abuses and its Socio – Economic Impacts- a Case Study of Kalmunai Municipal Area"

**Supervisor**
*Mr. MA. Jabbar,*
*Senior Lecturer,*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Miss.F.Siyami,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*

இன்றைய உலகில் அனைத்துத் தரப்பினராலும் பேசப்படும் ஒரு பிரச்சினையாக சிறுவர் உரிமை மீறல் காணப்படுகின்றது. இலங்கையில் வறுமை, யுத்தம், பொருளாதார நெருக்கடி போன்ற பல காரணங்களினால் அதிகமாக சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுகின்றது. இவ்வாறே அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை மாநகர சபைக்குட்படட பிரதேசங்களில் சிறுவர் உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றது. இது இப்பிரதேசத்தில் பல சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது சிறுவர் உரிமை மீறல் வடிவங்களை இனங்காணல், சிறுவர் உரிமை மீறலுக்கான காரணங்களை அறிதல் போன்ற பிரதான நோக்கங்களை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது.

இவ்வாய்வை மேற்கொள்ளத் தேவையான தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவு மூலங்களாக அவதானம், நேர்காணல், வினாக் கொத்து, இலக்குக்குழுக் கலந்துரையாடல் என்பன காணப்படுகின்றன. நேர்காணல் 25 எழுமாற்றாகத் தெரியப்பட்ட மாதிரிகளிலிருந்தும், வினாக்கொத்துக்கள் 50 வழங்கப்பட்டும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், பிரதேச செயலக அறிக்கைகள் என்பவற்றின் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இத்தரவுகள் பண்பு ரீதியான, அளவு ரீதியான முறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் விவரணரீதியாக அட்டவணை, வரைபடங்களைப் பயன்படுத்தி ஆய்வு முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் சிறுவர் உரிமை மீறல் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதோடு பல பிரச்சினைகளையும் ஏற்படுத்துவதை அறிய முடிந்தது. அதன்படி உடலியல் ரீதியாக, உளவியல் ரீதியாக, சுகாதார ரீதயாக, குடும்ப ரீதியாக மற்றும் சமூக ரீதியாகப் பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. இதற்குக் காரணங்களாக வறுமை, கல்வியறிவின்மை, நவீன தொழில்நுட்பம் மற்றும் பெற்றோரின் கவனமின்மை என்பன காரணமாகின்றன. இதனால் குற்றவாளிகள் அதிகரித்தல், சமூகச் சீர்கேடு உருவாகுதல், தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாதல், சமூக ஒதுக்கல், சிறுவர் தொழிலாளர்கள் அதிகரிப்பு, பொருளாதார நெருக்கடி நிலைக்கு குடும்பம் உள்ளாதல் போன்ற தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதையும் இவ்வாய்வு தெளிவுபடுத்துகின்றது.